
# தல வரலாறு



ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்
நாகேஸ்வரம், அளவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாநிதி அருட்கவி சீ. விநாசித்தம்பி (M.A, Ph.D)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அளவெட்டி நாகேஸ்வரம்

## ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்

# தல வரலாறு



ஆக்கியோன் :

**கலாநிதி அருட்கவி சீ. விநாசித்தம்பி** M.A. Ph.D.

பதிப்பாளர்

**ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்**

**நாகேஸ்வரம் – அளவெட்டி**

2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அளவெட்டி நாகேஸ்வரம்

# ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்

# இத்தலத்தின் பூர்வ வரலாறு

**தலம் : அளவெட்டி மேற்கு நாகேஸ்வரம்**

ஸ்ரீ நாகவரத நாராயணர் வீற்றிருக்கும் நாகேஸ்வரம் முன்பு பற்றைக் காடாயிருந்தது. இக் குறிச்சி தம்பளாவத்தை என அழைக்கப்பட்டது. இப்பகுதிக்கூடாக மக்கள் போக்குவரத்துக்குச் சிறிய சிறிய கால்நடை வழிகளிருந்தன. ஆடு, மாடுகள் இஷ்டப்படி மேய்ந்து திரியும் பகுதி.

முற்காலத்தில் இத்தலத்துக்குத் தெற்கேயுள்ள கிராமங்கள் வடக்கேயிருக்கும் கீரிமலை- மாவிட்டபுரம் முதலிய தலங்களுக்கு மேற்குறிப்பிட்ட கால்நடைப் பாதை வழியாகச் செல்வார்கள்.

கீரிமலை - ஆடி அமாவாசைத் தீர்த்தமாடுவதற்கு இரவிரவாக நடந்து செல்வார்கள். ஒரு தினம் கூட்டம் கூட்டமாகச் சென்றவர்களில் ஒருவரின் 9 வயதுச் சிறுவன் வழியைத் தவறவிட்டான். பிதாவும் மகன் வருகிறான் என்று மற்றவர்களுடன் போய்க்கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் மகன் தன்னைப் பிரிந்து விட்டான் என்று தெரிந்து மக்கள் கூட்டத்துள் தேடினார். பயனளிக்கவில்லை. கண்ணீர் வடித்து நின்றார். தீர்த்தமாடவில்லை. உடன் வந்தவர்கள் அங்கும் இங்கும் தேடினார்கள்.

சிறுவன் பற்றைக் காடெல்லாம் மிகுந்த இருளில் அப்பா அப்பா என்று கத்தித் திரிந்தான். நாவரண்டு விட்டது. சோர்ந்து ஒரு மரத்தடியில் இருந்து விட்டான். அது வாகை, நுணா, நாவல் மூன்று விருட்சமும் சேர்ந்த இடம். அப்போது ஒரு பெரியவர் வந்தார். "மகனே அழாதே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது அப்பாவிடம் யான் கூட்டிச் சென்று ஒப்படைப்பேன்" என்று கொஞ்சம் அவலை உண்ணக் கொடுத்துத் தண்ணீரும் பருகவைத்தார். மெல்ல மெல்லக் கூட்டிச் சென்று சிறுவனின் பிதாவிடம் ஒப்படைத்து மறைந்து விட்டார். யாவரும் அதிசயப்பட்டனர். பின்பு சிறுவனும் பிதாவும் தீர்த்தமாடிவிட்டு வீடு திரும்பினர். வருகின்ற போது, தான் ஓடி அலைந்த இடங்கள், தங்கிய இடம், பெரியவர் அவல் கொடுத்த இடம் யாவற்றையும் சிறுவன் பிதாவுக்குக் காட்டிய வண்ணம் வந்தான். வழக்கமான வழியிலிருந்து சுமார் 300 யார் தூரத்தில் அந்த இடங்கள் அமைந்திருந்தன. உடன் வந்தவர்கள் யாவரும் குறிப்பிட்ட இடத்தை மிக்க ஆர்வத்துடன் தேடினார்கள், பார்த்தார்கள் என்ன அற்புதம். சிறுவன் தங்கிய இடம் பெரிய பாம்புப் புற்றுள்ள இடம். அங்கேதான் பெரியவர் வந்து அவலும் தண்ணீரும் கொடுத்த நிகழ்ச்சி நடந்தது. யாவரும் காணும் படியாகப் புற்றிலிருந்து 2 பாம்புகள் வெளிப்பட்டுக் காட்சி காட்டி மறைந்து விட்டன. எல்லாரும் இது நாகதம்பிரானின் இடமென்று வழிபட்டுச் சென்றனர்.

காலகதியில் இவ்விடம் சிறு ஆலயமாக மாறியது. (இது 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலம்) இதன் பக்கத்தில் கால்நடைகள் தண்ணீர் குடிப்பதற்காக தர்மசிந்தனையாளர் ஒரு கேணியை வெட்டி விட்டார்கள். அதனால் "கேணியடி நாகதம்பிரான்" என எம் பெருமான் அழைக்கப்பட்டார். ஆவணி ரோகிணியில் விசேட பொங்கல் பூசை செய்து வந்தனர். பூசைக்காலம் பெரிய பலகார மடைகள் வைப்பார்கள். பஞ்சாரத்தி காட்டும் நேரம் மடைகளுக்கிடையே 2 பாம்புகள் காட்சி காட்டிச் செல்வது வழக்கம்.

எம்பெருமானே போற்றி
இலட்சுமி நாதா போற்றி
நம்பினார் தம்மைக் காக்கும்
நாகதம்பிரானே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெம்பவ வினைகள் தீர்க்கும்
வேணுகோவிந்தா போற்றி
தம்பனாவத்தை மேவும்
சங்கரா போற்றி போற்றி

என்று பாடி வழிபடுவார்கள்.

பிற்காலத்தில் இவ்விடத்தில் பொங்கற்காலம் மாத்திரம் பந்தலிட்டுப் பூசை செய்வார்கள். ஒரு வைரவ சூலம், ஒரு செம்பினால் செய்த பாம்பின் உருவம், ஒரு முக்கோணக்கல் இவை நிலத்திலேயே இருக்கும். இடையிடை மக்கள் வந்து கும்பிடுவார்கள். இரவு வேளையில் பெரிய தீச்சுவாலை தெரியும். இதனால் சிலர் கேணியடி முனி என்றும், சிலர் கேணியடிச் சோதி வைரவர் என்றும், சிலர் நாராயணராகிய நாகதம்பிரான் என்றும் வழிபட்டார்கள். ஆனால் கண்ணன் அவதாரம் செய்த தினமாகிய ஆவணி ரோகிணி, கிருஷ்ணஜயந்தியில் பொங்கல் செய்வார்கள். திருவருள் உத்தரவுப்படி இத்தலத்தின் பெயர் நாகேஸ்வரம் என அழைக்கப்படுகிறது.

## ஆலய வளர்ச்சி

முன்பிருந்த மரங்களும், புற்றுகளும் சிதைவடைந்து விட்டன. எம்பெருமான் மழையில் நனைந்தும், வெய்யிலில் காய்ந்தும் காணப்பட்டார்.

ஒருமுறை ஓர் அன்பர் ஓலையால் ஒரு கொட்டில் போட்டார். இக்காணிக்கு உரிமைபாராட்டும் ஒருவர் "எங்கள் காணிக்குள் நீ ஏன் கொட்டில் போட்டாய்" என்று கெட்ட வார்த்தைகளால் ஏசியபடி கொட்டிலைப் பிடுங்கி எறிந்துவிட்டார். இப்படிச் செய்த மறுதினம் அவரது பெரியவீடு திடீரென நெருப்புப் பிடித்துச் சாம்பரானது. சொத்துக்கள், நெல்லு, வரகு மூடைகள் யாவும் எரிந்தொழிந்தன. அவர் அந்த இடத்தையே விட்டு விட்டகன்றார். இவரது மனை இவ்வாலயத்துக்குத் தென்திசையில் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தை அடிக்கடி வந்து அடியார்கள் வழிபாடு செய்வார்கள். விஷங்கள், கொடிய நோய்கள் தீர்வதற்கு நேர்த்தி செய்து விமோசனம் பெறுவார்கள். எம்பெருமான் ஆண் குழந்தையாகவும், வயோதிபறாகவும், அழகிய கன்னிப் பெண்ணாகவும் நேரிலும், கனவிலும் காட்சிகாட்டி அடியார்களுக்கருள் புரிவார்.

அருட்கவி சீனியர் விநாசித்தம்பி ஆகிய சிறியோன் இத்தலத்திற்கு அரை மைல் தூரத்தில் பெற்றாருடன் வாழ்ந்து வந்தேன். அப்போது எனக்கு ஒரு பெண் குழந்தை 5 வயதாகியிருந்தது. தனியாக ஒரு காணி வாங்கி வாழ வேண்டுமென்று விரும்பினேன். இவ்வாலயத்தின் தென்கிழக்கில் ஒரு பழுதடைந்த கல் வீடிருந்தது. அது பேய் வீடு - இரவில் சத்தம் கேட்கும் - நெருப்பு எரியும் என்று பலர் அந்த வீட்டுப் பக்கமே போவதில்லை. அவ் வீட்டையும் 5 பரப்புக் காணியையும் விற்பதற்கு அதன் சொந்தக்காரர் விரும்பினார். இதனைக் கேள்வியுற்று அவரிடம் சென்று விலைபேசி முற்பணம் கொடுத்தேன். விஷயத்தை என் மனைவிக்கும், எனது பெற்றோருக்கும் கூறினேன். உடனே பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. அந்தப் பேய்வீட்டை வாங்கவேண்டாம் என்றனர். அயலவர்களும் அவ்வாறாக என்னைத் திகைக்க வைத்தனர். யான் எதுவும் பேசாமல் நித்திரை யானேன்.

அன்றிரவு ஓர் அற்புத கனவு - பெரிய புற்றிலிருந்து 2 பாம்புகள் எழுந்து படம் விரித்தன. பின்பு அவை இரண்டும் மறைந்தன. உடனே ஓர் அழகிய சிறுவனும் ஓர் அழகிய சிறுமியும் காட்சி காட்டினார்கள். அந்தச் சிறுமி சிறுவனைச் சுட்டிக்காட்டி "இவர் எனது அண்ணன் என்றாள்" பின்பு "நீ பயப்படாதே என்னை ஆதரித்தால் உன்னை ஆதரிப்போம்" என்று அந்தச் சிறுவன் சொன்னான். கண்விழித்தேன். எனது தாயாருக்குக் கனவைச் சொன்னேன். எல்லாரும் பரவசப்பட்டனர். "நீ பயப்படாமல் வீடுவளவை வாங்கு" என்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறியேன் பலகாலமாக சிவசக்தியாகிய மனோன்மணி அம்பிகையைக் கும்பிட்டு வந்தேன். ஆகையால் அந்த மனோன்மணியும், ஸ்ரீ நாராயணருமே எனக்குக் காட்சி காட்டியவர்கள் என்று மனந் தேறினேன்.

14.02.1953 இல் வீடுவளவை வாங்கினேன். 09.04.1953இல் குடியிருக்க வந்தேன். வந்ததினமே வீட்டின் சுவாமி அறையில் பெரிய பாம்பு நிமிர்ந்து நின்றது. பின்பு மறைந்து விட்டது. வீட்டுக்கும் கோயிலுக்கும் பொங்கி- வீட்டுப் பிரவேசம் செய்தேன். எம்பெருமானுக்கு ஒரு கோயில் கட்டிப் பூசித்தேன். பின்பு 3 அடிச் சதுரத்தில் சீமெந்தினால் ஒரு கோயில் கட்டினேன். கோயிலிருந்த காணியையும் விலையாகப் பெற்றுக்கொண்டேன். எம்பெருமாட்டியின் நல்வாக்கால் எனது சோதிடப்பணியும் பிரசித்தமானது. மூத்த பெண்ணுடன் 2 பெண்பிள்ளைகளும், 2 ஆண் பிள்ளைகளும் பிறந்தனர். 5 பிள்ளைகளும் எனது மனைவி அன்னம் என்பவரும் கோயில் பணிகளில் மிகுந்த கரிசனையுள்ளவர்களாயினர். எம்பெருமான் என்னைச் சிறப்பாகக் காத்து வருகின்றார். பெருமானுக்குப் பெரிய கோயில் கட்டவேண்டுமென்று நினைத்தோம். 1969இல் 16 அடி நீளத்தில் கோயிலானது. பின்பு 1979இல் பெரிய கோயிலாகி தூபியுடன் பொலிந்த கோயிலாக்கப்பட்டு 03.09.1979இல் முதற் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 07.08.1986ல் தேர் உற்சவம் ஆரம்பமாகியது. வருஷா வருஷம் ஆவணி ரோகிணி கிருஷ்ண ஜயந்தியில் தேர் உற்சவம் நிகழும். உற்சவத்தின் 10ஆம் நாள் தேர். 11ஆம் நாள் தீர்த்தம், 12ஆம் நாள் திருக்கல்யாணமும் நடக்கும். பற்பல நாடுகளிலிருந்து பக்த கோடிகள் வழிபாடுசெய்து செல்வார்கள்.

தேர் விழாவின் போது ஆண்டவன் பெயரில் வழங்கப்படும் அன்னதானத்தில் பங்குபற்றி அவரது திருவமுதை உண்ண வேண்டுமென்று பக்த கோடிகள் காத்து நிற்கும் காட்சி மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வீகமயமானதாகும். பார்ப்போர் உள்ளத்தைக் குளிர வைக்கும் காட்சியாகும். ஏனைய விழாக்களிலும் பொங்கல் பூசைகளும், அன்னதானங்களும் நடைபெற்று வருகின்றன.

ஆவணி மகோற்சவம், மாத ஏகாதசித் தீர்த்தம், திருப்பாவை, திருவெம்பாவை, நவராத்திரி, கந்தசஷ்டி, கேதாரகௌரி விரதபூசை, அபிராமி விழா, வியாழன், ஞாயிறு வார விசேட பூசைகள் யாவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

வியாழக்கிழமை தோறும் காலை 7.00 மணிக்கு விசேட பூசைகள் நடக்கும். ஸ்ரீமனோன்மணி வாசலில் திருநீறும், நாராயணர் வாசலில் தீர்த்தமும் வாங்குவதற்கு அடியார்கள் அணிவகுத்து நிற்பார்கள்.

### அற்புதங்கள் சில

1. 1964 வைகாசி மாதம் மானிப்பாய் வைத்தியசாலையில் 4 வயதுச் சிறுவன் இறந்து விட்டான். ஆனால் நாராயணர் அடியாராகிய (சங்கானை) துரைச்சாமி என்பவர் இறந்த பிள்ளையின் உடலைக் கொண்டுவந்து எம்பெருமான் வாசலில் போட்டு மனைவியும், தானுமாகக் கதறி அழுதனர். என்ன அதிசயம் சுமார் 15 நிமிடத்தில் சிறுவன் கண்விழித்தான். தண்ணீர் என்றான். தீர்த்தம் கொடுக்கப்பட்டது. பிழைத்தான் சிறுவன். இன்னமும் வாழ்கிறான். அவன் பெயர் சிவசுதன்.

2. ஆகாயத் தீர்த்தம்

கடினமான வெயிற் காலத்தில் ஸ்ரீமனோன்மணியின் தூபியிலிருந்து நான்கு திசையும் தீர்த்தம் வழிந்தது. இது ஒருவாரமாக நடந்தது.

மந்தாரை

ஒரு நெற்றிலிருந்து பல மந்தாரைக் கன்றுகளை உண்டாக்கி நட்டோம். எல்லாம் சிவத்தமலர் பூத்தன. ஸ்ரீ ரங்கநாதரின் பங்கில் நிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்தாரையைப் பார்த்து ஸ்ரீ ரங்கநாதனுக்கு நீ வெள்ளை மலர் தரக்கூடாதா என்று வேண்டினேன். மறுதினம் எல்லாம் வெள்ளை மலர்களே காணப்பட்டன.

**வயிற்றுவலி**

அடியாரொருவருக்கு 10 வருடமாக வயிற்றுவலி நோய். எங்கும் அலைந்தான். இத்தலத்துக்கும் வந்தான். கண்ணா கண்ணா என்று கத்திக்கொண்டு, தீர்த்தம் வாங்கிப் பருகினான். அதன்பின் வலியின்றி வாழ்ந்தான்.

**இரத்தப்போக்கு நீங்கியது**

அளவெட்டி தெற்கைச் சேர்ந்த ஒரு வாலிபனுக்கு வயிற்றாலும், வாயாலும் இரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. யாழ் போதனா வைத்தியசாலையில் 2 வாரமாக வைத்தியம் செய்தும் சுகமில்லை. எல்லாரும் கவலையுடன் செய்வதறியாது திகைத்தனர். ஒருநாள் அவருக்குத் துணையாக நின்ற ஒரு அன்பர் தான் சேமித்து வைத்திருந்த அம்பிகையின் தூபித்தீர்த்தம் எடுப்பித்துச் சிறிது நோயாளியின் வாயிலிட்டார். உடனே நோய் நீங்கியது. உடனே நோயாளி இரவோடிரவாக வைத்தியசாலைக்குப் பக்கத்திலிருந்த சொந்தக்காரர் வீட்டிற்குச் சென்றுவிட்டார். யாவரும் தெய்வீகத்தை வியந்தனர். ஆனந்தங் கொண்டனர்.

இப்படியாக பற்பல அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன.

## ஆலய பரிபாலனம்

இவ்வாலயத்தை ஸ்தாபித்தவரும், பூசித்து வளர்த்தவரும் அருட்கவி சீ. விநாசித்தம்பி ஆவர். ஆனபடியால் இவ்வாலயப் பொறுப்பு தனது சந்ததியினரின் நிர்வாகத்தில் இருக்கவேண்டும் என்பதற்காக பொறுப்புரிமைப் பரிபாலனசபை என ஒன்றை ஏற்படுத்தியுள்ளார். அப்பரிபாலன சபையே தற்போது நிர்வாகம் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றது. வழிபடுவோர் ஏராளமாக வந்து வழிபாடு செய்கின்றனர். இதற்குரிய யாப்பு 06.08.1993இல் எழுதப்பட்டு ஆலயமும் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டது. பதிவு இலக்கம் HA/5/JA/755 19.01.2000

சமய ஆசாரமுள்ள 9 பேர் பொறுப்புரிமைச் சபையினராகவும், அவர்களுள் 5 பேர் பரிபாலன சபையினராகவும் கடமையாற்றுவர்.

உபயகாரர் - தமது உபயத்தின் போது சமய ஆசாரமற்றவராகக் காணப்பட்டால் அவரது உபயம் ரத்துச் செய்யப்படும். ஆலய வாகனம் சப்பறம் மாத்திரமே உபயோகிக்கப்படும். வாடகைக்கு எடுக்கப்பட்டு உபயோகிப்பதில்லை. சமய நெறிகளுக்கு பக்தி நெறிக்குத் தடையான நிகழ்ச்சிகளை உபயகாரர் நிகழ்ச்சிகளாக ஏற்பாடு செய்யக்கூடாது.

## திருவிழாக்கள் பற்றிய சிறு குறிப்புக்கள்

**தைப்பூசம்**

முருகப்பெருமானுக்கு அபிஷேகமும் வீதியுலாவும் நிகழும்.

**தை - அமாவாசை அபிராமி**

ஸ்ரீ மனோன்மணிக்கு அபிஷேக விழா - அபிராமிப் பட்டருக்குத் தோடெறிந்து கருணைசெய்த நிகழ்ச்சியுடன் 4 வீதியும் அபிராமியந்தாதி 100 பாடல்களும் பாடப்படும்.

**மாசி - சிவராத்திரி**

சிவலிங்கத்துக்கு அபிஷேக ஆராதனையும் நடராசப் பெருமான் வீதிஉலா வருகையும் இடம்பெறும்.

**மாசி மகம்**

அம்பிகைக்கு அபிஷேகமும் வலம்புரிச் சங்காய்த் தோன்றிய காட்சியும், தீர்த்தம் வழங்கலும் நிகழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பங்குனி உத்தரம்**

சிதம்பர நடராசருக்கும், சிவகாமியம்மைக்கும் அபிஷேகம். வீதியுலா என்பன நடைபெறும்.

**சித்திரா பூரணை**

சிதம்பர நாதனுக்கும், நாராயணருக்கும் விசேட அபிஷேகம், வீதியுலா.

**வைகாசி விசாகம்**

ஸ்ரீ சக்திவேல் முருகனுக்கு அபிஷேகமும் வீதியுலாவும்.

**ஆனி உத்தரம்**

சொர்ணலிங்கம், மனோன்மணி இவர்களுக்கு அபிஷேகமும், மனோன்மணி வீதியுலாவும் நிகழும்.

**மணவாளக்கோலம்**

திருவோணத்தில் நாகவரதருக்கு ஊஞ்சலும், வீதியுலாவும்.

**ஆடிப்பூரம்**

ஸ்ரீ மனோன்மணிக்கு அபிஷேகமும், வீதியுலாவும் நிகழும்.

**ஆவணிச்சதுர்த்தி**

விநாயகருக்கு விசேட அபிஷேகமும் திருவீதி உலாவும் நிகழும்.

**மகோற்சவம்**

ஆவணி ரோகிணி கிருஷ்ண ஜெயந்தியில் தேர்த்திருவிழா வரக்கூடியதாக விழாக்கள் நிகழும்.

சப்பறம், கைலாசவாகனம் முதலிய விழாக்கள், உறியடி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீரங்கநாதர் பாத பூசை, சந்தான கோபாலர் தாலாட்டு, திருக்கல்யாணம், ஆஞ்சநேயர், வைரவர் பொங்கல், மகோற்சவத்தில் அடங்கும்.

புரட்டாதி நவராத்திரி எல்லாத்தினமும் அம்பிகைக்கு விசேட அபிஷேகத்துடன் நிகழும்

**ஐப்பசி**

கந்தசஷ்டி – ஸ்ரீ சக்தி வேல்முருகனுக்கு விழா எடுக்கப்படும்.

**கார்த்திகை**

கார்த்திகைத்தீபம் அபிஷேகத்துடன் நிகழும்.

**மார்கழித் திருவெம்பாவை- திருப்பாவை**

திருப்பாவை – திருவெம்பாவை ஏக காலத்தில் கொண்டாடப்படும்.

வைகுந்த ஏகாதசி

திருவாதிரை அபிஷேகம் வீதியுலாவுடன் நிகழும்.

**விநாயக சஷ்டி**

விநாயகருக்கு நிகழும்.

**மாதந்தோறும் ஏகாதசித் தீர்த்தம்**

ஒவ்வொரு மாதமும் வளர்பிறை ஏகாதசிக் காலங்களில் அபிஷேகம், சுவாமி தீர்த்தம் ஆடுதல் என்பன நிகழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய மூர்த்திகள்

மூலவர் – ஸ்ரீநாகவரத நாராயணர்

விநாயகர் – முருகன்

சிதம்பர நடராசர்

ஸ்ரீ இராம மூர்த்தி

சந்தான கோபாலர்

ஸ்ரீ ரங்கநாதர்

ஸ்ரீ சிவலிங்கம், சொர்ண மனோன்மணி

ஸ்ரீ சக்திவேல் முருகன்

வைரவர்

ஆஞ்சநேயர்

சனீஸ்வரன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனைப் பாடல்கள்

## விநாயகர்

| | | |
|---|---|---|
| ஆதிவி | நாயகப் | பிள்ளையாரே – சிவன் |
| அம்பிகை | அணைத்திடும் | பிள்ளையாரே |
| வேதப்பொ | ருள்ளெழுதும் | பிள்ளையாரே – எங்கள் |
| விக்கினம் | தீர்த்திடும் | பிள்ளையாரே. |
| | | |
| கஜமுக | சங்காரப் | பிள்ளையாரே – அருட் |
| கணபதி | ஓங்காரப் | பிள்ளையாரே |
| இயலிசை | நாடகப் | பிள்ளையாரே – எங்கள் |
| இதயத்தி | லிருந்திடும் | பிள்ளையாரே. |
| | | |
| தேங்காய்ப் | பிரிமுள | பிள்ளையாரே – அவல் |
| தேன்பால் | பழமருந்தும் | பிள்ளையாரே |
| பூங்கா | விரியுதவும் | பிள்ளையாரே – தமிழ்ப் |
| பொங்குதிரு | முறைதந்த | பிள்ளையாரே |
| | | |
| அப்பனது | தேர்முறித்த | பிள்ளையாரே – வன்னி |
| அறுகுமந் | தாரைசூடும் | பிள்ளையாரே |
| முப்பொருளு | மாகிநின்ற | பிள்ளையாரே – பெரும் |
| மூஷிகத்தில் | ஏறிவரும் | பிள்ளையாரே |
| | | |
| ஐந்துகரத் | தானைமுகப் | பிள்ளையாரே – பிறைச் |
| சந்திரனைச் | சாபமிட்ட | பிள்ளையாரே |
| வந்தப | வமறுக்கும் | பிள்ளையாரே – உன்னை |
| மறவா | வரந்தருவாய் | பிள்ளையாரே. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| நாராய | ணாயநம | நாராய | ணாயநம |
| நாராய | ணாயநம | நாராய | ணாயநம |
| | | | |
| கோபால | கோவிந்த | நாராய | ணாயநம |
| கோகுல | ராஜனே | நாராய | ணாயநம |
| பூபாரம் | நீக்கினாய் | நாராய | ணாயநம |
| புண்ணியம் | வளர்த்தவா | நாராய | ணாயநம |
| | | | |
| தேவாதி | தேவனே | நாராய | ணாயநம |
| திருவரங் | கேசனே | நாராய | ணாயநம |
| மூவாமு | குந்தனே | நாராய | ணாயநம |
| முரளிஇசை | நாதனே | நாராய | ணாயநம |
| | | | |
| பக்தரின் | காவலா | நாராய | ணாயநம |
| பகவானே | கேசவா | நாராய | ணாயநம |
| சக்கரக் | கையனே | நாராய | ணாயநம |
| சாரங்க | பாணியே | நாராய | ணாயநம |
| | | | |
| திருமகள் | கணவனே | நாராய | ணாயநம |
| சிங்கார | மணவனே | நாராய | ணாயநம |
| புவிமகள் | பாகனே | நாராய | ணாயநம |
| புனிததமிழ் | மோகனே | நாராய | ணாயநம |
| | | | |
| வாமனே | ராமனே | நாராய | ணாயநம |
| வரதவேங் | கடவனே | நாராய | ணாயநம |
| சாமளக் | கண்ணனே | நாராய | ணாயநம |
| சதுர்மறை | வண்ணனே | நாராய | ணாயநம |
| | | | |
| உயர்கருட | வாகனா | நாராய | ணாயநம |
| உரகத்தில் | ஆடுவாய் | நாராய | ணாயநம |
| துயரெலாம் | தீர்ப்பவா | நாராய | ணாயநம |
| துணையடியில் | சேர்ப்பவா | நாராய | ணாயநம |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவிந்தா

கோவிந்தா கோவிந்தா ஹறிஓம் கோவிந்தா
கோபாலா கோபாலா ஹறிஓம் கோவிந்தா

ஆலிலை துயின்றாய் ஹறிஓம் கோவிந்தா
அண்டம் படைத்தாய் ஹறிஓம் கோவிந்தா
ஞால மளந்தாய் ஹறிஓம் கோவிந்தா
நான்மறை புகன்றாய் ஹறிஓம் கோவிந்தா

பத்தவ தாறா ஹறிஓம் கோவிந்தா
பாரத வீரா ஹறிஓம் கோவிந்தா
பக்தச காயா ஹறிஓம் கோவிந்தா
பாண்டவர் தூதா ஹறிஓம் கோவிந்தா

மூவரு மானாய் ஹறிஓம் கோவிந்தா
முத்தி கொடுப்பாய் ஹறிஓம் கோவிந்தா
நாவலர் நேசா ஹறிஓம் கோவிந்தா
நாகவி நோதா ஹறிஓம் கோவிந்தா

மாதவ மணியே ஹறிஓம் கோவிந்தா
மாடுகள் மேய்த்தாய் ஹறிஓம் கோவிந்தா
கீதையை உரைத்தாய் ஹறிஓம் கோவிந்தா
கேடுகள் அழித்தாய் ஹறிஓம் கோவிந்தா

அன்பருக் கன்பனே ஹறிஓம் கோவிந்தா
அடியவர் துணைவா ஹறிஓம் கோவிந்தா
வன்பழி தீர்ப்பாய் ஹறிஓம் கோவிந்தா
மலரடி சேர்ப்பாய் ஹறிஓம் கோவிந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்குன்னைத் தேடுவேன்

எங்குன்னைத் தேடுவேன் கோவிந்தா - உன்னை
எப்படிப் பாடுவேன் கோவிந்தா
பொங்கர வப்பள்ளிக் கோவிந்தா - செல்வி
பூமகள் நாதனே கோவிந்தா

வஞ்சனை வாழ்விலே கோவிந்தா - மனம்
வருந்தித் தவிக்கிறேன் கோவிந்தா
தஞ்சம்சொல் வாரில்லைக் கோவிந்தா - உன்றன்
தாளிணைக் கடைக்கலம் கோவிந்தா

தேவகி மைந்தனே கோவிந்தா - இடைச்
சேரியின் காவலா கோவிந்தா
ஆவலு டன்தேடிக் கோவிந்தா - உன்னை
அலறிஅ ழைக்கிறேன் கோவிந்தா

நரசிங்க மாகிய கோவிந்தா - எனக்கு
நல்வழி காட்டுவாய் கோவிந்தா
மரமேழு சாடிய கோவிந்தா - என்றன்
மனவாட்டம் தீராயோ கோவிந்தா

நோயும் வறுமையும் கோவிந்தா - உயிர்
நோக வருத்துது கோவிந்தா
பேய்முலைப் பாலுண்ட கோவிந்தா - இந்தப்
பித்தனென் னைக்கண்பார் கோவிந்தா

கருடனில் மேவிய கோவிந்தா - யமுனைக்
காளிங்க நர்த்தனக் கோவிந்தா
தருமவல் எடுத்துண்ட கோவிந்தா - உனக்குத்
தருவதற் கொன்றில்லைக் கோவிந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| புல்லாங் | குழல்கொண்ட | கோவிந்தா – இந்தப் |
| புலையனைக் | கண்பாராய் | கோவிந்தா |
| கல்லாத | மூடன்யான் | கோவிந்தா – என்னைக் |
| கைதூக்கிக் | காத்திடு | கோவிந்தா |

| | | |
|---|---|---|
| ஆயிரம் | ஆயிரம் | கோவிந்தா – நீ |
| அவதாரம் | எடுத்தாயே | கோவிந்தா |
| மாயனே | ராமனே | கோவிந்தா – சோதி |
| மதுரைம | காராசக் | கோவிந்தா |

| | | |
|---|---|---|
| வேங்கட | வைகுந்தக் | கோவிந்தா – மகா |
| விஷ்ணுவே | கிருஷ்ணனே | கோவிந்தா |
| பாங்குயர் | பாற்கடற் | கோவிந்தா – ஞான |
| பாஸ்கர | நாரண | கோவிந்தா |

| | | |
|---|---|---|
| பாதத்தைக் | கைவிடேன் | கோவிந்தா – என்னைப் |
| பாராமற் | செல்லாதே | கோவிந்தா |
| ஆதிப் | பெருமாளே | கோவிந்தா – உனக் |
| கடைக்கலம் | வைத்துக்கொள் | கோவிந்தா |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ நாகவரத நாராயணர் என்னும் பெருமானே ஸ்ரீ கிருஷ்ணன் ஆவர். நாகமாகக் காட்சி காட்டி ஆவணி ரோகிணியில் ஆண்டுப் பூசை ஏற்றமையால் ஸ்ரீ நாகவரத நாராயணர் என்ற பெயர் பெற்றவர்.

அப்பெருமான் இன்று தேரேறி வருகிறார் அவரது திருவிளையாடலை நெஞ்சில் உணர்ந்து அவரிடம் அருள் வேண்டுதல் செய்வது நல்லது என்பதற்காக அவரது திருவிளையாடலை மிகச் சுருக்கி வெளியிடுகிறோம். அன்பர்கள், அடியார்கள் பாடிப் பரவி கலியுகக் கஷ்டம் தீர்ந்து இன்புற்று வாழ்வார்களாக.

**காப்பு**

**சத்தி மனோன்மணி சதாசிவன் புத்திரன்**
**அத்தி முகத்தவன் அடியா ரகத்தவன்**
**புத்தி புகழ்நிதி பூக்கும் கணபதி**
**சித்தி விநாயகன் சேவடி போற்றுவாம்**

**நூல்**

**பாரம் பொறுத்திடாப் பார்மகன் சுரருடன்**
**பாற்கடல் வந்துனைப் பரிவொடு வேண்டிட**
**நாரணா நீயும் "யான்கண் ணனாவேன்**
**நலந்தரு தேவர் நாடிடும் கோகுல**

**மக்க ளாகுவர் மறத்தினை யொழித்து**
**வளந்தரும் தருமம் வளர்ப்பே" னென்றாய்**
**மிக்க களிப்புடன் மேதினி யாள்செல**
**விளைந்து முற்றிய மெய்த்தவ சீலராம்**

**வசுதே வருக்கு வண்ணத் தேவகி**
**வயிற்றினி லுதித்தாய் வன்சிறை யகத்தே**
**திசைதொழும் ஆவணித் திதிஅட் டமியில்**
**திகழும் ரோகிணி தினத்திலே பிறந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகுல யசோதையின் குழந்தைப் பெண்ணைக்
குலவும் தேவகி குளிர்மடி வரைவும்
ஆவினம் காத்திடும் அந்த யசோதையின்
அருள்மக னாக அமைந்துநீ வளர்ந்தும்

விளையாட் டியற்றி வெண்ணெய் பால் தயிர்
விரும்பித் திருடி விண்ணுயர் மருதிடை
பழியறத் தவழ்ந்தும் பாம்பை யடக்கிப்
பரத நாட்டியம் பற்பல புரிந்தும்

பூதனை என்னும் பொல்லாப் பேய்முலை
புசித்தபின் பவளைப் பொன்றிடச் செய்தும்
தீதுறு கல்மழை தீண்டா வண்ணம்
திருக்கோ வர்த்தனச் செழுங்குடை பிடித்தும்

ஓடும் யமுனையில் ஊருறை மங்கையர்
ஓங்குநீ ராடிடும் ஒழுங்கிலா நிலைகண்(டு)
ஆடைக ளெல்லாம் அபகரித் தன்னார்க்
கறிவுரை வழங்கி ஆடையை உதவியும்

திருணா வர்த்தனாம் தீய அசுரன்
திகைக்கும் புயலாய் சேணிடைத் தூக்கி
வருநே ரத்தில் மலைபோல் பருத்து
வதைத்துப் பிழிந்து மாண்டிடச் செய்தும்

மண்ணைத் தின்றான் மாயவன் என்று
மாதா யசோதை வாயைத் திறவென
வண்ணச் சிரிப்புடன் மலர்வாய் திறந்து
மண்டல சராசரம் வாயினுட் காட்டியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்றை யெறிந்து கனிவிளா விழுத்தியும்
கபட நாரையின் கடிவாய் கிழித்தும்
துன்றிய அகன்னெனும் துட்டநா கத்தைத்
தொலைத்து நினது தோழரைக் காத்தும்

மண்ணவர் விண்ணவர் மரஞ்செடி பறவைகள்
மற்றுள சீவர்கள் மனங்குளிர்ந் தொடுங்கும்
பண்ணிசை வேய்ங்குழல் பாட்டுடன் இசைத்தும்
பகரொணா வடிவில் பாரெல்லாம் திரிந்தும்

மனிதருள் மனிதனாய் மனுநெறி காட்டி
வஞ்சகக் கம்சன் வலிந்திழுத் தியற்றிய
தனுர்யா கத்தில் தமையனோ டேகி
தனுவையும் முறித்துச் சமரிலெ திர்த்து

முழுங்குசா ணூரன் முஷ்டிகன் கூடன்
முரட்டுச் சாலன் தோசலன் முதலிய
களம்பொலி மல்லரைக் கணத்தி லழித்து
காவற் குவலயா கஜத்தினைக் கொன்று

மாமன் கம்சனின் வன்தலை பிடித்து
மண்ணில் விழுத்தி மார்பமர்ந் தன்னவன்
சீவனைப் பிரித்துத் திருவடி கொடுத்தும்
தேவர் முனிவர் திசையெலாம் துதிக்க

நற்றவக் குசேலனின் நறுமவ லுண்டும்
நயந்தரு தங்கைக்கு நனிதுகில் கொடுத்தும்
உற்றிடு மைவர்க் குறுதுணை புரிந்தும்
ஒலிடும் யானையின் ஊறு தவிர்த்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதித் துவாரகை அரசியல் நடாத்தியும்
அன்னை இலக்குமி அவதா ரமாகிய
சோதி ருக்குமணித் தோகைநல் லாளையும்
தொழுசத்ய பாமா சுந்தரி தனையும்

நன்மணம் புரிந்தும் ஞாலம் செழிக்கும்
நாக வரத நாராயண னாய்
பொன்மலர்க் கடப்ப பொழிலார் அளவை
பொருந்துநா கேஸ்வர புரத்திலும் இருந்தனை

நாகத்தி லாடிடும் நந்தகோ விந்தா
நாடுவார்க் கருளும் ஞானவா ரிதியே
பாகம் திருமகள் பார்மகள் பயில
பாற்கடல் நடுவே பள்ளிகொள் பவனே

கீர்த்தி மிகுந்த கிருஷ்ண ஜெயந்தியில்
கீதம் இசைக்க கிளர்முழ வதிர
சீர்த்தி தருமணிச் சித்திரத் தேரில்
திருவீ திவரும் தேவா போற்றி

அடியார்க் கிரங்கும் அரங்கா போற்றி
அன்பில் விளைந்த அமுதே போற்றி
படியளக் கும்கோ பாலா போற்றி
பஞ்சம் கொடுநோய் பகைஅவா வெகுளி

வஞ்சனை பொறாமை மதுகொலை முதலாம்
மயக்கத் துயரம் வாரா தருள்வாய்
அஞ்சே லென்றுன தருள்விழி காட்டி
அருந்தொண் டருட னணைப்பாய் போற்றி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புயர் மனைவி அறம்தரு மக்கள்
அறிவுடை நண்பர் அருள்மொழிக் குரு தவ
இன்பச் சிந்தனை இசைந்தசந் தானம்
எல்லாம் தந்திடும் இராகவா போற்றி

கலையும் நிதியும் கற்றநூற் றெளிவும்
கருதும் தெளிவில் காணும் சோதியும்
நிலையிற் பிரியா நெஞ்சமும் நெஞ்சில்
நிறைந்த சுகமும் நீதிசூழ் வாழ்வும்

தருவாய் போற்றி தந்தையே சரணம்
கருட வாகனக் கண்ணா சரணம்
குருவே சரணம் கோவிந்தா சரணம்
வருபிழை பொறுக்கும் மாதவா சரணம்

நவக்கிர கங்கள் நலியா தணைக்கும்
நாரணா சரணம் நாகேசா சரணம்
அவப்பிறப் பறுக்கும் ஐயா சரணம்
அடைக்கலம் உனக்கே சரணம் சரணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கிருஷ்ண பஞ்சகம்

ஹரேராம ஹரேராம ஹரேராம கிருஷ்ணராம்
ஹரேராம ஹரேராம ஹரேராம கிருஷ்ணராம்

நாதப்பிரம்ம வாசுதேவ ஹரேராம கிருஷ்ணராம்
நாகவரத நாராயண ஹரேராம கிருஷ்ணராம்
வேதகீத வெங்கடேச ஹரேராம கிருஷ்ணராம்
மேகவண்ண விஷ்ணுதேவ ஹரேராம கிருஷ்ணராம்

வரதராஜ மங்களாய ஹரேராம கிருஷ்ணராம்
மதுசூதன முரளீதர ஹரேராம கிருஷ்ணராம்
பரமேஸ்வர பாண்டுரங்க ஹரேராம கிருஷ்ணராம்
பத்மநாப சிற்சொரூப ஹரேராம கிருஷ்ணராம்

ஸ்ரீவைகுந்த ஸ்ரீநிவாச ஹரேராம கிருஷ்ணராம்
தேவதேவ ஸ்ரீரங்கேச ஹரேராம கிருஷ்ணராம்
ஸ்ரீமுகுந்த வாமராஜ ஹரேராம கிருஷ்ணராம்
சிவபூஜித லிங்கதாஸ ஹரேராம கிருஷ்ணராம்

சகலலோக ரட்சகாய ஹரேராம கிருஷ்ணராம்
சங்கநாத சக்கராய ஹரேராம கிருஷ்ணராம்
பகவகருடவாகனாய ஹரேராம கிருஷ்ணராம்
பத்மதேவி மோகனாய ஹரேராம கிருஷ்ணராம்

சர்வரூப சர்வலோக ஹரேராம கிருஷ்ணராம்
சர்வமந்ர சாமனாய ஹரேராம கிருஷ்ணராம்
தர்மஜோதி ஞானமூல ஹரேராம கிருஷ்ணராம்
சத்திசிவ தத்துவாய ஹரேராம கிருஷ்ணராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டலம் இரண்டோடு குவிந்தசடை முடிமிளிர

குளிர்கமல வாயரும்ப

குலவுகௌத் துவமணியும் துளசிமணி மாலைகளும்

கோலமார் பினில் விளங்க

தண்டுகம லம்திகிரி சங்குநாற்கரமேவித்

தண்ணருள் மழை வளங்க

சாந்தமங் களநீல வண்ணனாய்த் திருமகள்

தழுவுவல மும் புவனியாள்

கொண்டிடம் திகழவும் பண்டு அரவமாய் அளவை

கூடுநா கேஸ் வரத்தின்

கோயிலுறை அரிநாக வரதநா ராயணா

குறை நீக்கும் கண்ணழகனே

வண்டுறையும் நின்பாதமலரிணையை எம்தலையில்

வைத்துஇன்ப வாழ்வு தருவாய்

மன்னும் ஆவணிக் கிருஷ்ண ஜயந்திரதம் ஏறி வரும்

மாதவ மகா தேவனே.

## அருட்புகழ்

வேகஉலகில் வீணாயுழைத் தலையாதே

பாகினினிய பாதாரமுத் திரைதாராய்

ஆகமமறை யாதாரதத் துவகீதா

நாகவரத நாராயணப் பெருமானே.

-❖- -❖- -❖-

ஈனத்தி லேபிறந்து புவிமீதே

ஏதுக்க ளாலலைந்து திரிநாயேன்

தானத்தி லேசிறந்த பதயோகம்

சாதித்தே னாவியின்ப முறுவேனோ

வானத்தி லேபறந்து வருவோனே

வாரிக்கு ளேதுயின்ற நெடுமாயா

ஞானத்த னேகுழந்தை வடிவோனே

நாகத்தி லாடிநின்ற பெருமாளே.

கடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கரிகணன் பிறிண்டேர்ஸ், 424 காங்கேசன்துறை சாலை. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2222717,4590123

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org